வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம்,

நாகர்கோவில்

**மே.கு. எண்.நி3/3644/2021** **நாள்:** 28.10.2022

அனுப்பப்படுகிறது.

ஓம்./-ப.சுப்பிரமணியன்,

வேளாண்மை இணை இயக்குநருக்காக,

நாகர்கோவில்

பெறுநர்,

செல்வி.இரா.அபிஷா

இளநிலை உதவியாளர்(பிணையம் ),

வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், கிள்ளியூர்.

(வேளாண்மை உதவி இயக்குநர் , கிள்ளியூர் மூலமாக)

நகல் : வேளாண்மை உதவி இயக்குநர் , கிள்ளியூர்.

// ஆணைப்படி//

கண்காணிப்பாளர்

28/10/22

**சுருக்கம்**

பணியமைப்பு – வேளாண்மை-உழவர் நலத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள செல்வி ஆர்.அபிஷா என்பவரின் பணியினை 01.06.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை – உழவர் நலத் (வேநி9) துறை**

திருவள்ளுவர் ஆண்டு 2053, சுபகிருது, ஆவணி மாதம் 22-ம் நாள்

அரசாணை (3டி) எண்.123 நாள்:07.09.2022

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.76, வேளாண்மைத் (வே.நி.9) துறை, நாள் 28.04.2021.
3. வேளாண்மை இயக்குநர் கடித எண் அநிபி8 / 115266 / 2022, நாள் 18.03.2022.

*****

**ஆணை:**

நாகர்கோவில், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டில் மூஞ்சிறை, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் உதவி விதை அலுவலராகப் பணிபுரிந்த போது 20.08.2008 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த எம்.இராமச்சந்திரன் அவர்களின் மனைவி திருமதி ராஜநந்தாபாய் என்பவர் தனது மகள் ஆர்.அபிஷா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க கோரி தொடர்ந்த வழக்கில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய தீர்ப்பினை நிறைவேற்றும் வகையில், அவரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில், அவரது மகள் செல்வி ஆர்.அபிஷா என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தனியர் சார்பாக காலம் கடந்த விண்ணப்பம் தொடர்பாக, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைக்கு விலக்கு மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 20(6)(b)-ஐத் தளர்வு செய்து, வழங்கப்பட்ட அனுமதியின்படி, வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண். அநிபி6/38634/2019, நாள் 26.05.2021-இன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் (பிணையம்) பணி நியமனம் செய்து, நாகர்கோவில், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதென்றும், அவ்வாறே, நாகர்கோவில், வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் நி3/3644/2021, நாள் 31.05.2021-இன்படி, தனியர், நாகர்கோவில், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டிலுள்ள கிள்ளியூர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தின் கீழ் கிள்ளியூர், வேளாண்மை விரிவாக்க மையத்தில் இளநிலை உதவியாளராக (பிணையம்) 01.06.2021 முற்பகல்

பணியில் சேர்ந்துள்ளார். தனியரின் பணியினை 01.06.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, பார்வை இரண்டில் காணும் அரசாணையின்படி, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அசலில் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் (பிணையம்) பணி நியமனம் செய்யப்பட்டுள்ள செல்வி ஆர்.அபிஷா என்பவரின் பணியினை 01.06.2021 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியானது, வரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ. சா. எண்.15132/ க்யூ.1 / 2022-1, நாள் 22.08.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ. சா. எண்.3028119 / ஜி1 / 2022, நாள் 31.08.2022-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5 (இணைப்புடன்).
செல்வி ஆர்.அபிஷா, இளநிலை உதவியாளர் (பிணையம்)
வழி: வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் (ஜி1) துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண் 8421/ வேநி9 / 2022
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்